செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்-அசு]  யாழ்ப்பாணம்: ஆனந்த ஞு மார்கழி மீ உசு-உ வெள்ளிக்கிழமை (10-1-1975)  [இல: சுள

# ஆசிரிய நியமனங்களை ஆட்சேபித்து

## அமைச்சரே கேள்வி கடாவுகின்றூர்?

ஆசிரியப் பதவிக்கு எவ்வகையில் நியமனங்கள் செய்யப் பெறுகின்றன என்ற ஆசங்கை பொது மக்கள் மத்தியில் என்றுமே இருந்து வருகின்றது!

அமைச்சர் திரு. கலுகலா அவர்கள் இந்தவகையிலே ஆட்சேபஞ் தெரிவிக்கும் முகமாக ஒரு உரை நிகழ்த்தியிருப்பதாகச் செய்தித் தாள் ஒன்று தெரிவிக்கின்றது

கேகாலையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்திலேயே திரு. கலுகாலை இந்தக் கண்டனத்தைத் தெரிவித்திருப்பது பொது மக்களின் பொதுவெண்ணத்தை ஆதரிப்பதாகும்.

ஆசிரியர் நியமனத்துக்கு ஒரு களங்கமற்ற திட்டத்தைக் கல்வி அமைச்சு செயற்படுத்தாதிருப்பதை யார் தான் குறை கூறுவர்.

## சேவையிற் சிறந்த சிவகுருநாதர்

சைவ பரிபாலன சபைத் தலைவராகப் பன்னெடுங்காலம் பணியாற்றிய பெரியார் திரு. இ. சிவகுருநாதர் தினம் சபை நாவலர் ஆச்சிரமத்தில் 8-1-75 விசேட பூசையுடன் நடைபெற்றது.

## மூவர் இடைத் தேர்தலுக்கு முன்வந்துள்ளனர்

காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலுக்குத் தமிழர் கூட்டணி சார்பாகத் திரு. சா. ஜே. வே. செல்வநாயகமும், பொதுவுடைமைக் கட்சி சார்பாகத் திரு. வி. பொ[illegible]மும், தனிமுறையாலே திரு. மு. அம்பலவாணரும் நியமனப் பத்திரங்களை சென்ற செவ்வாய்க் கிழமை சமர்ப்பித்தனர்.

யாழ் மாவட்ட அதிபதி தேர்தல் அதிகாரி என்ற வகையில் இப் பத்திரங்களை ஏற்று வீடு, நட்சத்திரம், கப்பல் என்னும் சின்னங்களை முறையே இவர்களுக்கு அமைத்தனர்.

தேர்தல் 6-2-75 நடைபெறுமென்றும் வெளியிடப்பட்டது.

## தேவே! கருணை செய்வாய்!!

— "இறை—ஒளி" —

அங்கை அரிசியும் அற்பம் சருக்கரையும் தெங்கின் அருவல் சிலவுமாய்ப் — பொங்கல் புரியவைத்தாய் தேவே! புரிந்தோமிப் பாடம் கருணையினிச் செய்வாய்! கசிந்து.

## பொல்லார் மிக நல்லார்

[ "சைவ சித்தாந்த போதகர்" ]

சித்தாந்த சாத்திரம் கடினமாயிருக்கின்றதே! இலக்கண இலக்கிய தருக்க அறிவு வேண்டுமே! தீட்சை வேண்டுமே! இவை பலரை வாட்டும் பிரச்சினைகள்.

பொல்லார் தனை இருந்தால் எல்லாம் வரும்; எல்லார்க்கும் வரும். இதுவே உண்மை. சாத்திர தோத்திர ஞான அனுபவம் பெறப் பொல்லார் தனை ஒன்றே போதும்; ஏனையவை தாமாக வந்தடையும்.

செல்லுக்கு இரையாகி மூலையில் மறைந்து மறந்து கிடந்த தேவாரத் திருமுறைகளை இராசராசன், நம்பியாண்டார் மூலம் எடுத்தளித்தவர் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார். மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் முன் கிட்டை கூடியே சிவஞானபோதம் அருளினர். பொல்லார் அருள் இல்லையேல் சாத்திரம் எங்கே! தோத்திரம் எங்கே! எல்லாம் அவரருள்

பொல்லார் — பொள்ளப்படாதவர் — துளைக்கப்படாதவர் — சுயம்புமூர்த்தி

திருமுறைகளிற் காலத்தினால் முற்பட்ட திருமந்திரம் விநாயகர் துதியுடையது. பதினோராந் திருமுறையில் விநாயகர் பிரபந்தங்கள் பலவுள. பெரிய புராணத்தில்

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

சைவ பரிபாலன சபையின்

# பணிகள் என்ன?

## மூத்த உறுப்பினர் 'அறநெறிக் காவலர்' விளக்குகின்றூர்

சைவ பரிபாலன சபையில் நீண்ட காலம் உப தலைவராகப் பணி ஆற்றியவரும், சபையாரது பணிகளில் ஒத்துழைத்தவரும். சபையினது வயதை உடையவருமாகிய "அறநெறிக் காவலர்" முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் சபையின் பணிகளை வாழ்த்தி, உடல் நலிவுற்ற நிலையிலும் சபைக்கு எழுதிய கடிதத்தை இங்கு மகிழ்ச்சியுடன் பிரசுரம் செய்கின்றோம்.

வை. இரகுநாத முதலியார்'
கௌரவ காரியதரிசி

செயலாளர் அவர்கள்,
சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

தாங்கள் அன்புடன் 29-12-74 இல் எழுதிய கடிதம் கிடைத்தது. மிக்க நன்றி. எனக்கு சைவ பரிபாலன சபையில் கடந்த 27 ஆண்டுகள் பணி புரியும் வாய்ப்பு இறைவன் அருளால் கிடைத்தது. அதற்கு நான் என்ன கைம்மாறுடையேன். எனது சிறு பணிகளை எல்லாம் சபையார் பெரும்பணிகளாகக் கருதி, இதய பூர்வமாக நன்றி பாராட்டியமைக்கு நான் பெருமைப்படுகின்றேன். சைவ பரிபாலன சபையினுடைய நிருவாக சபைக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் வழிபாட்டையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவ பரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிய சைவப் பெரியார்களால் தோற்றுவிக்கப்பட்டது. அக் காலம் முதல் இன்றுவரை சைவம், தமிழ், தமிழ் சமுதாயம் ஆகியவற்றிற்கு அளப்பரிய பணிகளைப் புரிந்து வருகின்றது ஒரு துறையில் அல்ல பல துறைகளில் இச் சபை தொண்டாற்றி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் இச் சபையின் பணிகள் ஓங்கிப் போற்றப்படுகின்றன. சபையாரின் அரிய பணிகளால், நாவலர் பெருமான் அவர்களுடைய புகழ் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் இன்றும் பரவிக்கொண்டே இருக்கின்றது. நாவலர் அவர்களுடைய புகழ் பரவும் இந்நிலையில், ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகளின் பணி சைவ மக்களின் மத்தியில் மறைந்திருப்பது மிக்க மன வருத்தத்திற்குரிய ஒரு செயலாகும்.

ஸ்ரீ ஞானப்பிரகாசசுவாமிகளை, அவர் யாழ்ப்பாணச் சைவ சமயிகட்குத் தொண்டாற்றிய பெருமைகளை நினைவு கூருமுகமாக, சைவ மக்களது நினைவில் நிறுத்தும் வகையில் சைவ பரிபாலன சபையார் அவர் பிறந்த இடமாகிய திருநெல்வேலியில், அவர் வாழ்ந்த இடத்தைக் கண்டு பிடித்து ஓர் அத்திவாரக் கல் நாட்டினர்கள். அது நடந்து பல ஆண்டுகள் கழிந்து விட்டன.

அந்த இடத்தில் அவர் பெயரால் ஓர் மணி மண்டபம் கட்டி அன்னருக்கு ஓர் சிலை எழுப்ப வேண்டும். இதற்கு திருநெல்வேலி மக்கள் ஒத்துழைப்பு நல்க என்றும் தயா

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்

சமயபாடப் புத்தகங்கள்

- அரசாங்க பாடத்திட்டத்திற்கேற்ப எழுதப் பெற்றவை.
- மாணவர்களுக்கு இலகுவானவை.
- விளக்கப் படங்களுடன் கூடியவை.
- உலகநீதிப் பகுதிகளின் கருத்துரைகள் அடங்கியது.
- சபையார் நடாத்தும் பரீட்சைக்கு உதவியானவை.

சைவசமயநெறி 2 ம் வகுப்புக்குரியது 75 சதம்

சைவசமயநெறி 3 ம் வகுப்புக்குரியது ரூ. 1-75 சதம்

சைவசமயநெறி (க. பொ. த.)
தேசியக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு 1975, 76, 77 ம் வருடங்களுக்குரிய புதிய திட்டப்படி எழுதப் பெற்றது. விரைவில் வெளிவரும்.

- 25 புத்தகங்களுக்கு மேல் வாங்குபவர்க்கு விசேட கழிவு உண்டு.

விபரங்களுக்கு:
மனேஜர்,
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். போன் 356.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 8-1-75.

# தை பிறந்தால் வழி பிறக்கும்

## இத் தத்துவத்தை விளக்குகிருர் திருத் தருமைக் குருமணி அவர்கள்

[நமது சிறப்பு நிருபர் திரு: மா. பாலசுப்பிரமணியன் சிதம்பரம்]

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று கூறுவதன் தத்துவம் என்ன? என்பதற்கு திருத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி' திருக்கோயிலில் நிகழ்ந்த வைபவத்தில் ஆசியுரை வழங்குகையில் மார்கழி மாதம்முழுவதும் இறைவனை வழிபடுகிறோம். அதன் பயனாகத் தை மாதத்தில் நல்ல வழி பிறக்கிறது மார்கழி மாதம் முழுவதும் கடவுளைப் பூசித்துத தைமாதத்தில் ஒரு கக்ரியததைத் தொடங்கினுல் அது எவ்வகை இடையூறுமின்றி வெற்றிபெறும். எனவேதான் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றனர் நமது முன்னோர்கள், அது போலவே காலையில்எழுந்து இறைவனை வழிபட்டவுடன் தொடங்கும் காரியங்களும் நல்லனவாகவே நடக்கும் என்றும் விளக்கம் கூறினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்குகையில் அம்பிகை ஆண்டவனோடு இருத்தலே சாத்திரங்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இது உலகியலுக்கும் ஒத்து இருக்கிறது பிள்ளைகள் தாயாரைப் பார்த்துத் தமக்கு வேண்டியவற்றைக் கூறித் தாய் மூலமாகத் தந்தையிடம் பயனைப் பெறுகின்றனர், உயிர்கள் அனைத்தும் அம்பிகையை நோக்கியே தவம் (விரதம்) இருந்து பயன் பெறுகின்றனர். அம்பிகையோ தனக்கு வேண்டும் வரங்களை இறைவனை நோக்கித் தவம் இருந்து வழிபட்டுப் பெறுகின்ருள். அது போன்று ஒவ்வொரு குடும்பத் தலைவியும தலைவனை வணங்க வேண்டும். ஆனுல் இன்று மனைவியும் பிள்ளைகளும் சேர்ந்து கொண்டு குடும்பத் தலைவனிடம் தண்டை போடுகின்ருர்கள், தன் கணவனைத் தவிரப் பிற ஆண் மக்களைப் பெண்கள் புகழக்கூடாது. கணவனுக்கு அடங்கி மனைவி நடந்தாற்ருன் பிள்ளைகளும் பெற்ருேர்களுக்கு அடங்கி நடப்பர். பெற்ருேர்கள் சொல்லுவதைப் பிள்ளைகள் கேட்க வேண்டும். பெற்ருேர்கள் கோபித்தாற்கூட அதுவும் தம் நன்மைக்குததான் என்று பிள்ளைகள் உணர்ந்து பொறுமையாக இருக்க வேண்டும், எனவே குடும்பத் தலைவனிடம் தலைவி வணங்கி நடக்க வேண்டும். தலைவன் தலைவியாகிய பெற்ருேர்களிடம் பிள்ளைகள் வணங்கி நடக்க வேண்டும். இந்த நல்ல பண்பு ஒவ்வொரு வீட்டிலும் வளர்ந்தால் நாட்டிலும் நல்ல பண்பு மலரும் என்றும் கூறினர்கள்.

குருமகா சந்நிதானம் அவர்கள் மேலும் தொடர்ந்து ஆசியுரை வழங்குகையில் உலகில் எல்லோரும் இன்பத்தையே வரவேற்கின்றனர் துன்பத்தை யாரும் விரும்புவதில்லை, வரவேற்பதுமில்லை. துன்பமாவது யாது? இன்பம் என்ருல் என்ன? என்பவற்றைப்பற்றித் திருவள்ளுவர் அழகாக விளக்குகின்ருர்.

"இன்பம் விழையான்
வினை விழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

வினையாவது செயல், ஒவ்வொரு மனிதனும் தான் சுகமாக வாழவேண்டும் என்று விரும்புகின்ருன். தான் சுகமாக வாழ்வதற்கு நாட்டு மக்களை — உற்ருர் உறவினர்களைம் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு உழைத்துப் பணி செய்தலையே முக்கியமான செயல்களாகக் கொள்ளவேண்டும். இப்படி வாழ்பவன் தன் உறவினரின் துன்பம் துடைக்கும் தூணாக விளங்குவதுடன் தானும் துன்பம் நீங்கி இன்புறுபவனாகிருன். இன்பம் வரும்போது அறிவு மயங்குகிறது; துன்பம் வரும்போது அறிவு வளர்கிறது; தெளிவடைகிறது, வந்த துன்பத்தை எப்படிப் போக்குவது என்றெல்லாம் அறிவு சிந்திக்கவும் செயலாற்றவும் செய்கிறது, எனவே இன்பம் வரும்போது அறிவு வேலை செய்யாது மயங்கும். ஆனுல் துன்பம் வரும்போதுதான் அறிவு வேலை செய்யும்; வளரும்; தெளிவடையும், எனவே துன்பத்தை வரப் பிரசாதமாக வரவேற்கும் மனப் பக்குவம் வர வேண்டும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவரவர் மன நிலையே காரணம். ஒரு சிலர் துன்பத்தைத் துன்பமாகவே நினைக்கின்றனர்; நிச்சயிக்கின்றனர்; வேறு சிலர் மாருகக் கருதுகின்றனர்; துன்பத்தையும் முன்னை வினைக்கேற்ப இயல்பாக வருவது என்று கருதுகின்றனர். இவ்வாறு எண்ணுவதற்கு அவரவரது தகுதி வேறுபாடே காரணமாகும்.

"இன்பம் விழையான் இடும்பை
இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்"

துன்பத்தை விரும்பாமல் தனக்கு வரும் துன்பத்தையும் இன்பமாகக் கருதாமல் இயல்பானது என்று கருதுபவன் எந்தக் காலத்திலும் எந்தப் பிறவியிலும் துன்பம் அடைதல் இல்லை! துன்பத்தைத் தாங்கிக்கொள்ளுவதும் துன்பம் தருகிறவர்களைப் பொறுப்பதும்தான் தவம், தவம் என்ருல் என்ன? ஒரு இலட்சியங்களை —உரியகுறிக்கோளை மேற்கொண்டு அவரவரும் தம் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிப்பேன் என்று உறுதிஎடுத்துக் கொண்டு நிறைவேற்றுவது தான் தவம், உறுதி எடுத்துக் கொண்டவற்றைக் கைவிடாமல் காப்பது விரதம், தாம் மேற்கொண்ட நற்செயல்களைக் கடைப்பிடிப்பதில் எந்த இடையூறுகள் வந்தாலும் மேற்கொண்டவற்றை விடாமல் காக்கவேண்டும் என்றும் கூறினர்கள்,

குருமகாசந்நிதானம் அவர்கள் தொடர்ந்து ஆசியுரை வழங்குகையில் உலகில் நிகழும் நிகழ்ச்சிகள் நல்லதாகவும் கெடுதலாகவும் இருக்கலாம், எல்லாம தெய்வசம்மதமாகவே நிகழ்ந்துவருகின்றன தீய செயல்களில் ஈடுபடுகிறவர்கள துவாழ்க்கையில் அவர்களது செயலுக்கேற்ற பலனை இறைவன் உடனுக்குடன் கொடுத்தாற்ருன் தெய்வம் இருக்கிறது இல்லையானுல் தெய்வம்என்று எண்ணுவது சாதாரண மனிதனின் கருத்து, உயரிய நோக்கமுடையவர் அவ்வாறு நினைக்க மாட்டார்கள் நினைக்கவுங் கூடாது: எல்லாம் நன்மைக்கே என்று இறைவனை வழிபட்டு இருத்தல் வேண்டும், வாழ்க்கையில் நிகழ்வன எல்லாம நன்மைக்கே இறைவன் திருவருளாலேயே எல்லாம் நிகழ்கின்றன என்று எண்ண வேண்டும் என்றும் கூறினர்கள்.

## தில்லையம்பதியில் திருவாதிரை விழா

[நமது சிதம்பரம் நிருபர்]

திருத்தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் ஏறிய பின்னர் ஸ்ரீ மாணிககவாசகரின் அருள்பாடல்களான "திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சி" பாடல்கள் எங்கும் வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் தில்லையம்பதி, சென்னை மற்றும் ஆதீனத்தின் 27 சிவாலயங்களிலும், டிசம்பர் 20 ஆம் நாள் தொடங்கி டிசம்பர் 29ஆம் நாள் வரை 10 நாட்களிலும் "திருவெம்பாவை — திருப்பள்ளியெழுச்சி" விழாவை ஆரம்பித்து வைத்து 10 நாட்களிலும், 29 புலவர்கள். பேராசிரியர்களைக் கொண்டு திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி (பாடலகளுக்கு) விரிவுரைகளை சிறப்பாக நடத்தி வைததார்கள். ஆங்காங்கும் மக்கள நிறையகூடி பக்தியுடன் கேட்டு மகிழ்ந்தனர்.

❁ ❁ ❁

தில்லையம்பதியில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் மார்கழித் திருவாதிரைத் திருத் தேர் விழா டிசம்பர் 28 ஆம் நாள் நடைபெற்றது ஸ்ரீ நடராஜப் பெருமானின திருத் தேர் நிலையைவிட்டு கிளம்பியதுமுதல் நான்கு வீதியும் வலம்வந்து திருத் தேர் மீண்டும் நிலையில் வந்து நிற்கும் வரை, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள, திருமடத்தின் அறக்கட்டளையின்படி திருமுறைவாணர்கள் திருப்பல்லாண்டு பாடலை ஓதிககொண்டு வந்தனர்.

தில்லையில் திருப்பல்லாண்டுப் பாடலை அருளிய ஸ்ரீ சேந்தனரின் காலத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் மார்கழித் திருவாதிரை உற்சவத் திருத் தேர் நிலையைவிட்டு கிளம்ப முடியாதிருந்தது. உடனே ஸ்ரீ சேந்தனர் "திருப்பல்லாண்டு" பாடலையோத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருத்தேர் நிலையைவிட்டு வீதிவலம வருவதற்குப் புறப்பட்டுவிட்டது. ஸ்ரீ காசி மடம் அதிபர் அவர்கள் ஸ்ரீ சேந்தனரின் விழாவை மார்கழித் திருவாதிரை திருத்தேர் விழாவன்று நடைபெற்று வர அறக் கட்டளையை நிறுவியுள்ளார்கள்.

❁ ❁ ❁

தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் மார்கழித் திருவாதிரை மகோற்சவ திருத் தேர் விழா டிசம்பர் 28 ஆம் நாள் நடைபெற்று, ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் இரவு ராஜ சபை என்றும் கூறும் ஆயிரங்கால் மண்டபத்துக்கு எழுந்தருளியதும், பொது தீக்ஷிதர்கள் இது வரையிலும் எங்கிலும் நடைபெற்றிராத "ஏககால (ஒரே நேரத்தில்) சமமேளன லட்சார்ச்சனையை முதன்முறையாக "உலக க்ஷேமத்தின் பொருட்டு நடத்தி வைத்தார்கள்.

200 தீக்ஷிதர்கள் சம்மேளன ஏககால லட்சார்ச்சனையை ஆரம்பித்துவைத்து சுவாமிக்கும், அம்பாளுககும் 4 இலட்சம் அர்ச்சனையை சிறப்பாக நடத்தி ஆராதனைகள் செய்து பிரார்த்தனை செய்தனர்.

❁ ❁ ❁

திருத்தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவாகள் டிசம்பர் 29ஆம் நாள் காலை தில்லையம்பதி ஸ்ரீசிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானின் மார்கழித திருவாதிரையின் 10 ஆம் நாள் தரிசனம் செய்வதற்கு சிஷ்ய மடமான திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான சுவாமிகளுடன் வருகை புரிந்து நகரபிரதான அம்பிகையான ஸ்ரீ தில்லையம்மன் கோவிலில் வழிபாடுகள் நடத்திக கொண்டு ராஜசபை என்று கூறும் ஆயிரங்கால மண்டபத்தில் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு 1,000 (ஆயிரம்) நெய் லட்டுக்கள பாவாடை (நிவேதனம) போட்டு உயர்ந்த சாதரா (பொன்னுடை) சாற்றுப்படி செய்து ஆராதனைகள் நடத்தி திருவாதிரை தரிசனம் செய்தார்கள, நிவேதன லட்டுககள பொது தீக்ஷிதர்களுக்கும் அன்பர்களுக்கும விநியோகம செய்து வைத்தார்கள்.

## சைவபரிபாலன சபையின் பணிகள்...

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

ராக டிள்ளார்கள். முன்னர் சபையாருடைய நன் முயற்சியினுல் அவ்விடத்தில் ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சபை என்ற ஒரு ஸ்தாபனம் உருவாக்கப் பட்டு நன்கு செயற்பட்டு வந்தது. அதன் செயலாளர் அகாலமரணம் அடைந்தமை காரணமாக அச்சபை அதன் பின் இயங்காது போய்விட்டதென அறிகின்றேன். அச்சபைக்கு மீண்டும் உயிரூட்டி தொழிற்படுத்த வேண்டும்.

இது சைவ மக்களினதும், சிறப்பாக சைவ பரிபாலன சபையினதும் கடமையாகும்.

ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவருடைய தொண்டுகளை சைவ மக்கள் உள்ளத்தில் பதியச் செய்வது சிறந்த சைவப் பணியாகும். இவருடைய சரித்திரத்தை மிக விரிவாக ஆராய்ந்து எழுதி சபையார் தமது பத்திரிகைகளிலும், புத்தக வடிவிலும் வெளியிடல் சாலச் சிறந்த பணியாகும. ஞானப்பிரகாச முனிவர் இயற்றிய நூல்கள் இன்று கிடைத்தலரிது.

அவர் சுமார் 10 நூல்கள் எழுதியுள்ளார்கள். அவற்றுள் 9 நூல்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன அவற்றை தமிழ் மொழியில் பெயர்ப்பித்து அச்சேற்றுதல் சைவ உலகிற்கு அரும்பெரும் சொத்தாகும். அவர் சிவ ஞானசித்தியாருக்கு எழுதிய உரையையும் பதிப்பித்து அச்சிட்டால் அதுவும் சீரிய பணியாகும்.

இராமநாத வள்ளலுக்கு விழா எடுப்பது மாத்திரமன்றி குருபூசையும் செய்ய வேண்டும். அதே போன்று ஞானப்பிரகாச சுவாமிகளுக்கும் விழாவும் குருபூசையும் எடுக்கவேண்டும்.

சைவ பரிபாலனசபையின் முன்னுட் தலைவர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் சிவஞான சித்தியாருக்கு அரிய உரை ஒன்று எழுதி இருந்தார்கள். அவர் அகால மரணமடைந்ததால், அவ்வுரை அச்சேறும் வாய்ப்பை இழந்து விட்டது. சபையார் முயன்று அச்சேற்றினுல் சைவ உலகிற்குத் திறமையாகப் பயன்படும்.

சைவ பரிபாலன சபை சிறப்பாகச் சைவப் பணி புரிய வேண்டும் என்ருல், மேல் மாடி உடைய அழகான கவர்ச்சியான கட்டடம் ஒன்று அத்தியாவசியம். இக்கருத்தை நான் பலமுறை சபையாரது கூட்டங்களில் சொல்லி வந்துள்ளேன்.

சைவ பரிபாலன சபை நிழல் விருட்சமாகத் தொழிற்பட்டு சைவ மக்களுக்கு தொண்டுபுரிய எனது மனமார்ந்த நல்லாசிகள்.

இங்ஙனம்
சே. முத்துத்தம்பி

Registered as a Newspaper in Ceylon G. P. O. No. ... of 19..)

Supplement to the "INTHUSATHANAM"

Price 20 Cts.

Our Work is
Our Advertisement

Saiva Prakasa Press

# INTHUSATHANAM
## (The Hindu Organ)

( The only Newspaper in Ceylon for the Hindus )
PUBLISHED EVERY FRIDAY

FOR BOOKS ON
SAIVAISM

Dial 356

Saiva Prakasa
Book Depot

Estd. Sept. 11, 1889 JAFFNA, FRIDAY JANUARY 10, 1975 Phone No. 356

## 'Sri Panchaksharam and 'Sivohambavana'

### Guru and Disciple

One of the most important 'Sadanas' or means of liberation is what is usually spoken of as 'Sohambavana' or 'Sivohambavana' meditation on the Lord within one's self. Gnana-Yogam We often see it resorted to by the teacher in imparting wisdom (Gnanam) to his disciple. As is well-known, a disciple is always expected to look upon his Guru as the Lord Himself. Arulnandi Devar for instance refers to his Guru in his Irupah Irupahtu as follows:

கண்ணுதலும் கண்டக் கறை
யும கரந்தருளி
மண்ணிடையில் மாக்கள்
மலம் அகற்றும —வெண்
ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்று ஒரு
கால் மேவுவரால்
வேறின்மை
கை கண்டார் உள்ளத்திற்
காண்.

Concealing the upper eye and jet-black throat the Lord appeared at Tiruvennai Nallur to drive away the (darkness of) Malam from (the hearts of) men If one contemplates but once on the name of Meykandan he would immediately realize the inseparate Lord within The disciple should not even so much as think of the Guru as an ordinary mortal. And a real Guru is expected to be not a make-believe, Guru but one who has really seen something of the Light and who has so mastered himself as to be able, for the time being at least, to identify himself with the Deity. This Sadana is not an easy thing to practise and is not intended for ordinary people. Only those who are very far advanced in spirituality can successfully practise it and, among others, it is prescribed to no less a personage than a Jivanmuktan. These Jivan-Muktas are persons who have known the Truth but are still in their bodies owing to the remnants of past Karmam (Piraraptam) not being eaten up, and this Sadana of Sivohambavana is prescribed to no less a personage than a Jivan-Muktan. These Jivan-Muktas are persons who have known the Truth but are still in their bodies owing to the remnants of past Karmam (Pirarapatam) not being eaten up. and this Sadana of Sivohambavana is prescribed for them so that they may not be affected by Pasam until the time for complete liberation arrives for, owing to the long association of the soul with Anavam, there still lingers about them what is called Malavasana, similar to the smell that lingers in a pot in which asafetida (பெருங்காயம்) was kept and removed.

### Sivohambavana, its underlying principle

Though this Sadana is difficult for us to practise at our present stage, the principle underlying it may be easily comprehended. It consists in thinking of ourselves as Godly by constantly repeating within ourselves 'I am Sivam', I am That'. When we suffer from a severe headache for example, by constantly thinking 'Oh, I am all right, I am all right' we actually find that we really get rid of the pain little by little When a patient is suffering with a severe malady, the physician and our elders would not allow talkative old ladies to speak of the disease as anything serious in the patient's hearing lest the patient be terrified and the malady increase in vigour. 'The mind in its own place and in itself can make a heaven of hell, a hell of heaven', what noble words are these which the English poet puts into the mouth of Satan! Every one knows the story of the man who imagined that he had swallowed a frog and would not get cured of his disease. So then the principle Sivohambavana may

( Over to page 4 )

## 'Gem of Advice"

(Culled by E. P. Rasiah)

Now that the schools are re opening, lots of little children will start their schooling and parents will appreciate the sentiments in Abraham Lincoln's Gem of Advice — "Treat him Gently."

"World take my son by the hand he starts school today It's all going to be strange and new for a while and I wish you would sort of treat him gently. You see, up to now, he's been king of the roost. He's been the boss of the back-yard. I have always been handy to soothe his feelings But now...things are going to be different. This morning he's going to walk down the front steps, wave his hand and start on a great adventure that probably will include wars and sorrows. To live in this world will require faith and love and courage. So, World I wish you would sort of take him by his young hand and teach him the things he will have to know.

Teach him—but gently if you can. He will have to learn. I know that all men are not just—that all men are not true. Teach him that for every scoundrel there is a hero, that for every crooked politician there is a dedicated leader. Teach him that for every enemy there is a friend.

Let him learn early that the bullies are the easiest people to lick.

Teach him the wonders of books. Give him quiet time to ponder the eternal mystery of birds in the sky, bees in the sun and flowers on a green hill. Teach him that it is far more honourable to fail than to cheat.

Teach him to have faith in his own ideas, even if every one tells him they are wrong.

Try to give my son the strength not to follow the crowd when everyone else

(Over to page 4)

## THE TRUE DEVOTEES

Everywhere will they see God, and ever be rejoicing.
From delusion, lust and anger they will wholly free themselves.
They are happy in the practice of steadfast meditation,
And with good and evil karma are equally content.
For they are the true devotees
And servants of the Lord Om.

If unbearable distress should come, they accept it and are joyful.
Both heaven and earth they worship and venerate as One.
The sight of the dance of the Holy Feet they relish,
And "Namasivaya Hail!" are the words they will repeat.
For they are the true devotees
And servants of the Lord. Om.

They will say that for them there is no end no beginning.
They will never be unmindful of loving devotees.
All attachment to caste and creed they have utterly forsaken,
And from the state of silence they will not deviate,
For they are Siva's devotees
And servants of the Lord. Om.

In this world they will refuse to conform to any pattern.
They will never be allured by the joys of fleeting youth
Through repeated invocation they will become like madmen,
And will ever be proclaiming that all that is is truth.
For they are the true devotees
And servants of the Lord. Om.

They do not make distinction between female, male and neuter.
"Hara Hara! Siva Siva! with gladness they repeat.
They will say that with the seeing eye It is in truth commingled.
They will enjoy the vision where there is no day or night,
For they are Siva's devotees,
And servants of the Lord. Om.

They will say for them there is no being born or dying.
They will live like simple fools or those who are insane.
From their pure and humble hearts all deceit will be ejected.
They proclaim — "Namasivaya is the holy name of God",
For they are the true devotees
And servants of the Lord. Om.

They will state that nothing is destroyed and nothing is created.
The 'five' and the 'three', they will realize as One.
They will say there is no coming and equally no going.
They will subjugate the mind that treads the wrongful path,
For they are the Siva's devotees
And servants of the Lord. Om.

( Over to page 4)

### THOUGHTS TO BE TREASURED

ஆவலால் எமக்கு ஆம் மலர் மரங்கள்
ஆக்கல், அம்மலர் பறித்தில், அம்மலரால்
தா இலாவகை தார்பல சமைத்தல்,
தணப்பில் எம்புகழ் சாற்றல், அன்புடன் நாம்
மேவும் ஆலயம் அலகிடல், மெழுகல்,
விளங்க நல்விளக்கு இடுதல், எம் அடியார்க்கு
ஏவல் ஆனவை செய்தல், இச் சரியை.
இயற்ற வல்லவர்க்கு எம் உலகு அளிப்போம்.

Planting and rearing flower plants with religious fervour, culling their flowers and making garlands of various kinds for Us, chanting Our praises, cleaning and washing Our temples and lighting them and obeying the commands of Our devotees. These form Sariyai and those who perform them. We admit to Our Kingdom.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JANUARY 10, 1975

## Pongal to Ward off Penury

Symbolic of the spiritual culture of the vast territories of the orient where Tamil speaking people lived a lofty life in the ancient days, the transit of the energy-giving planet Sun in the zodiacal sign of Maharam (known to the Western astronomers and astrologers as Capricornus) was celebrated with religious ceremonies to mark the commencement of prosperous times and to offer prayers in gratitude to Parameshwara for His merciful Blessings.

Several thousands of years have rolled by since those days of spiritual awareness and appropriate living conditions. The present generation now find themselves in quite a different position. The area of habitation has shrinked to limited boundaries; the scheme of life has suffered a severe and striking change. Consequentially Thai Pongal reminds them of the glorious past and the contradictory present.

The Pongal that is scheduled to take place on Tuesday, next week is, therefore, an occasion for one and all to observe with the utmost piety and sincerest prayers as the present struggle of humanity is more for survival than for promising prosperity. From plenty to penury, prospects to poor circumstances is really a pitiable plight from which recovery is possible only by means of penance and prayer.

Let us, therefore, devote, in devotional duty, the Fourteenth of January to useful purpose praying in true Saiva tradition and offering Pongal Poojah to Providence and the Celestial Body the all energizing Sun. Humbled as we are, denied the routine rains during the North East Monsoon, let us also realize that suffering and satisfaction are both meted out in measured reasonableness and deservingly. And our Prayer now is in expression of our realization that we the people have erred and learnt a lesson.

## Siva Selvi Thangammah in Her Fifty First Year

Special Poojah was performed at Thurkkai Amman Temple on 7-1-1975 on the occasion of Selvi Thangammah Appakutty reaching her fifty first year. In recognition of Selvi's services to the Thukkai Amman Temple and to Saiva Religious Propaganda a full day program was arranged at the Temple on 7-1-1975.

## Sri SivaGurunathar Day at Sabhai Ashram

In remembrance of Sri R. Sivagurunathar, a former President of the Jaffna Saiva Paripalana Sabhai, Siva Poojah by Brahmin Priests was held at the Sabhai Navalar Ashram on Wednesday January 8, 1975 in the morning, Recital of Thirumurai was followed by tributes to the memory of the past President.

## "Gem of Advice"

( From page 3)

in getting on the band-waggon.

Teach him to listen to all men but to filter all he hears on a screen of truth and to take only the good that comes through

Teach him to sell his brawn and brain to the highest bidder but never to put a tag on his heart and soul.

Teach him to close his ears on a howling mob—and to stand, and fight if he thinks he's right.

Teach him gently, World, but don't coddle him, because only the test of fire makes fine steel.

That is a big order World, but see what you can do. He is such a nice little fellow."

## Sri Panchaksharam

( From page 3 )

thus he in a way conceived.

We read in Siva Gnana Siddhiyar :

கண்ட இவை அல்லேன்
நான் என்று அகன்று,
காணுக்
கழிபரமும் நான் அல்
லேன் எனக் கருதிக்,கசிந்து
தொண்டினொடும் உளத்து
அவன் தான் நின்ற
கலப்பாலே
சோகம் எனப் பாவிக்கத்
தோன்றுவன் வேறு
இன்றி,
விண்டு அகலும் மலங்கள்
எல்லாம், கருடதியானத்
தால்
விடம் ஒழியும் அது போல,
விமலனையும் அடையும்,
பண்டை மறைகளும் அது
நான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவது இப்
பாவகத்தைக் காணே.

Dissociating himself from the seen world as being not himself and pondering over the fact that he is not the unseen Supreme Para Brahm, if the loving and faithful devotee meditates on Him losing himself in Him and identifying himself with Him in all humility and pure love, the Lord who is ever present with him being in Adwaitha relation reveals Himself and removes the Malam and makes him pure; just as the snake-charmer contemplates on Garudan and removes the poison of snake-bite This Sadana it is which the hoary Vedas teach in the words 'Aham Brahm Asmi'(I am Brahm), &c.

( To be continued )

## THE TRUE DEVOTEES

( From page 3 )

They will not be concerned with siddhas, gods or sages
"Siva Siva !" is the prayer they will offer every day.
The Lord, who is the God of gods, they will always be extolling,
And even evil - doers they will not censure or despise,
For they are Siva's devotees
And servants of the Lord. Om.

—Natchintanai

( To be continued )

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 10, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

## Contesting Candidates for Kankesanturai Seat

Nomination papers of Mr. S. J. V. Chelvanayakam (T. U. F.), Mr. V. Ponnampalam ( C. P. — Moscow) and Mr. S. Ambalavanar (Independent) were accepted by the Returning Officer, Mr. Vimal Amerasekara, G A. Jaffna on Tuesday January 7, 1975.

The candidates were assigned the symbols House, Star & Ship respectively.

The by-election is scheduled for February 6, 1975.

## U N' P. Snatches Katana Seat from the U. L F.

Mr Wijepala Mendis the U. N. P. candidate won the Katana by-election held on Wednesday January 8, 1975 defeating the U L. F. candidate Mr. K. C. de Silva of the U. L. F. by a majority of 1050 votes.

Mr. W. Mendis polled 20747 as against 19697 for the S. L F. P. candidate.

## PARTITION NOTICE

IN THE DISTRICT COURT
OF POINT PEDRO

No. 12238

Kathiripillai Iyer Arumugasamy Iyer of Thondaimanaru

Vs. Plaintiff

1 Sambasivam Thangavelautham of Do and 47 others

Defendant

It is hereby notified that action No. 12238 has been instituted in the District Court, Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the partition and / or sale of the land called "Kaluvanuvayady" in extent 57, 7/8 Lms. V. C. Do 48¼ Lms. P. C. Do Metkukaiaddy 38. 5/8 Lms, V. C. situated at Thondaimanar in Udupiddy Parish, Vadamaradchy Division, in the District of Jaffna, Northern Province.

The defendants in the abovesaid Partition Action were summoned to appear in the District Court of Point Pedro on 19-11-73.

By order of Court,
Sgd, A. Thavarajah
Registrar.

Drawn by
Sgd.
K. S. Muttucoomaraswamy
Attorney-at-Law
for Plaintiff.
34 10

உ

யாழ்ப்பாணம் — சைவ பரிபாலன சபை

1974 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற

## சித்தாந்தத் தேர்வுகளில் சித்தியடைந்தோர்

## சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சை

(1) திரு. சிவ. ஆறுமுகசுவாமி ( 3 ஆம் பிரிவு )
(2) திரு. பொ. மகேஸ்வரன் ( 3 ஆம் பிரிவு )

எதிர் வரும் சைவ மாநாட்டில் தராதரப் பத்திரங்கள் வழங்கப்பெறும்.

வ. கந்தசாமி,
தேர்வுச் செயலாளர்.

8-1-75.

# நாவலர் பிள்ளைத்தமிழ்

[ எட்டாவது : சிற்றிற் பருவம். ]

ஆக்கம் : — "பழைய பாணி" —

( முன் வளர்ச்சி — 73 )

மேலாங் குலத்துப் பெரியோன் நீ
மிகுமா தரவுக் குரியோன் நீ
விளையாட் டரங்கிற் புகுந்தோய் நீ
விருந்தாட் டவரத் தகுந்தோய்நீ
காலா விட்ட பணி நமது
தலையால் முடிக்கக் கடவேம் நின்
கருத்திற் கிதமாய் வாய்க்கிதமாய்க்
கறிசோ றருத்திக் களிகூர்வேம்
ஏலா தனசெய் தெமையலையா
தெம்மோ டிருத்தி எமையளித்தி
**எளியார் தமக்கு வலியாதல்**
**எவர்க்குந் தலையாந் தருமமையா!**
சேலார் வயல்சேர் திருநல்லைத்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே! (6)

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
இல:- 4289

சாவகச்சேரி சின்னத்துரை பெண் அன்னலெட்சுமி
எதிராக — வழக்காளி
(1) நாவற்குளி, கந்தன் கிட்ணனும் பெண்
இறந்த (2) பொன்னுவும் — எதிராளிகள்
(3) நாவற்குளி, முருகன் கந்தையா
— பதில் எதிராளி

*சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் 4289 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் பிரகாரம் கீழ்க்காணு மாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1975 - ஆம் ஸ்ரீ மாசி மாதம் [பெப்ரவரி] 13 ஆம் திகதி வியாழக்கிழமை (13-2-75) பிற்பகல் 2 - 00 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.*

## தீர்வைத் தொகை

ரூபா 1900/-ம், 3-9-1972 தொடக்கம் தீர்வைத் திகதி 3-11-73 வரைக்கும் ரூபா 1250/-க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச செலவு ரூபா 323/-

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழி இறை 'மரக்காரை வளவு" நி. பர. 3 குழி 11 ஷை குப்பைபயன் வளவு நி. பர. 4 இருவகைக்கும் இப்போ ஒரே ஆதனமாக நி. பர 7 குழி 11 இதில் தெற்குப் பக்கமாக அரை வாசிக்கு நி. பர. 3 குழி 14½ ( மூன்று குழி பதினாலரை ) எல்லை கிழக்கு:- கோவிலாக்கண்டி கண்ணகி அம்மன கோவிலுக்குரிய ஆதனம், வடக்கு: — செல்லன் பெண் செல்லத்துக்குரிய ஆதனம, மேற்கு:— இளையவன் செல்லனுக்குரிய ஆதனம, தெற்கு:- ஒழுங்கை, இவ்வெல்லைக்குள்ளடங்கியவைகளனைத்தும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் F 367/151 இல் பதியப்பட்டது.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்

சாவகச்சேரி
6—1—75. 104/22/1

1975-ஆம் ஆண்டின் முதல் ஞயிறு

# சிவதொண்டன்

சிவதொண்டனின் ஒவ்வோர் மாத முதல் ஞாயிறுதோறும் நடைபெறும் யாகம் 1975 ஆம் ஆண்டிற்கு 5-1-75 இல் நடைபெற்றபோது திருவருளாக குருவருள் பாலிக்க எமக்கும் அதில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது.

" எண்ணுவ வெல்லாம் உயர்வெண்ணம்" ஆக இருக்கும் பொருந்திய திருவருள் வழி நடத்துமல்லவா? உயர் எண்ணம்: தேகம் கர்மமுடைத்து -ஆசையால் கர்மம் நடந்தே தீரும், நாம் இவற்றை பயன்கருதாது செயலாற்றுவோம் என்பது.

குருநாதன் திவ்விய தரிசனம், ஆலயத்தின் பண்புமிக்க நடை முறைகள், தூய்மை, (Cleanliness is next to Godliness) அன்பின் அழகு, பொலிவு ஓர் தூய சமுதாயம். "அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலத்தின்" நினைவு மனம் பொங்கவும், உடம்பு உரோமம் சிலிர்ப்ப, பக்தர்களின் பாடல்களைக் கேட்டு இன்புற்றவற்றை நாம் எப்படிச் சொல்வது! சிவபுராணம்

"நமச்சிவாய வாஅழ்க,
நாதன் தாள்வாழ்க,
இமைப்பொழுதும் என்
நெஞ்சில் நீங்காதான்
தாள்வாழ்க,
ஈசனடி போற்றி எந்தையடி
போற்றி
தேசனடி........................"

சிவபுராணம் பாடப்படுகிறது.

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது இருதயக் குகையில் இருந்து எம்மை உய்விக்கும் குருநாதனுக்கு வாழ்த்துக்கள் நடக்கின்றது. எமக்கு ஈசனாகவும், தந்தை தாய் சுற்றம் ஆகவும் இருந்த குருநாதனைப் போற்றி பக்

டாக்டர் என். கனகரத்தினம்
யாழ்ப்பாணம்

தர்கள் பரவசமடைகிறார்கள். இவர்கள் யார்? நமது குருநாதனின் சமுதாயம்.

நாம் இவ்வெழுபதாம் பத்தாண்டுகளின் ஒவ்வோர் வருட முடிவிலும் சென்ற ஆண்டுகளின் துன்ப இன்பங்களைப் சேர்த்துப் பேசுமிடத்தில் எல்லாங் கெட்டது என்னும் பான்மையாக (Pessimism) பேசவேண்டியதாக இக் காலங்கள் நிகழ்ந்து வந்ததை நாம் அறிவதுமல்லாமல் 1974 ஆம் ஆண்டின் முடிவில் உலகம் முழுவதுமே அநேக தார்நிகழ்ச்சிகள நடந்ததை எடுத்தியம்பி அதைப் பின்னணியாக வைத்து தொடர்ந்து உலகில் நிலவும் பஞ்சமும் பசியும், மனநிம்மதியின்மையும், கொடூர சம்பவங்களும் தொடரப் போகிறதே என்ற ஏக்க எண்ணங்களை எடுத்தியம்பினர்.

இவற்றிற்கெல்லாம் பரிகாரம் எது என்பதையும், "நோய்க் கிடங்கொடேல்" (Prevention is better cure) than என்னும் தத்துவங்களையும் எம் விஞ்ஞானிகளால் சொல்வதற்கும் செய்வதற்கும் சக்திதோன்றாவிடத்தில் நாம் என் செய்வோம்?

எங்கள் குருநாதனும், குருநாதன் போன்று மெய்ஞ்ஞானிகளின்றி வேறு யார் எம்மைக் காப்பாற்ற முடியும். இவர்கள் காட்டிய வழி நடத்தலே இக் கோரங்களில நின்று தப்ப வழி

இதற்கு நாம் சிவதொண்டனில் கண்ட சமுதாயம் வளர வேண்டும். "நாம் தொண்டரடித் தொண்டர்" ஆக வேண்டும். உலகில் சிவயோகம் வளர வேண்டும், சிவபக்தி வளர வேண்டும், சிவசிந்தனை வளர வேண்டும், எல்லாஞ் சிவம், சிவமயம், "நாம் ஒன்றும் அறியோம்" என்ற யோகநாதன் மகாவாக்கியம் எல்லோர் மனதிலும் இருக்க வேண்டும், எழ வேண்டும், அன்பேசிவம்என அன்பு மிளிர வேண்டும். ( Love they neighbour ) என்னும் உள்ளன்பு பிறக்க வேண்டும் உலகமுய்ய.

இவற்றைப் புறக்கணித்து சமுதாயம், நல்ல சமுதாயம் உண்டு பண்ணுகிறோமென்று வாய் கொட்டிப்பிதற்ற தம் பேச்சுக்களையே விழுங்குஞ் சமுதாயமா நற்சமுதாயத்தை உண்டுபண்ணப்போகிறது. — —

### இலவசம்

ஈரப்பலாக் கன்றுகளையும் புல்வகைகளையும் நடுகைக்கு பெற விரும்பும் சங்கங்கள் தகுந்த அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தாரிடம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

( முன் வளர்ச்சி — 21 )

ஆக்கல், காத்தல், அழித்தல் இம் முத்தொழிலு மறைத்தலென ஒன்றாயடங்குதலின் அவற்றுப் பின் மறைக்கின்றாயென்றது அருளுகின்றாயென்றார்.

அருடருவாயென்பதன் கண்ணே தருவென்பது துணைவினையடிவலவேர். புதரிதரு ஞாயிறு எழுகருநாற்ற மென்புழிப்போல,

இனி அருளைச் செய்கின்றாயென இரண்டாம் வேற்றுமைத் தொகைச் சொல்லாக்கிப் பொருள்கொள்ளுமமையும்.

### போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்

உரை: நினது தொழும் பல்லாததினின்றும் என்னை நீக்குவாயாக நீக்கி நினது தொழும்பிற் புகச் செய்வாயாக. போக்குவாய் புகுவிப்பாயென்னும் பிறவினையிரண்டும் ஏவல்வினையாயினும் வியங்கோட் குறிப்பின்கண்வந்து வேண்டிக்கோடலாயின.

தொழும்பல்லாததினின்று மென்பது சொல்லெச்சம். என்னையென்பது இடைநிலைவிளக்கு. என்னைப் போக்குவாய் என்னைப் புகுவிப்பாயென முன்னும்பின்னுங் கூட்டியென்க.

### நாற்றத்தின் ஏரியாய்

உரை: நறுமலரெழுதரு நாற்றம்போலச் செவ்வியின் மலருமென்னுள்ளத்தெழுந்தானே!

ஏர். எழுதல்; உலகமுவப்ப வலன்ஏர்புதிரிதரு என்பது திருமுருகாற்றுப்படை. ஏரியானென்பது திரிந்து ஏரியாயென விளியேற்று வினைப்பெயராயிற்று.

ஏரியானென இறப்பின்கண் வருதலின் என்னுடையுள்ளத்தெழுந்தானெனல் வேண்டும். ஏரியானென்பது ஆகியான், எண்ணியானென்பனபோல்வது.

இனி நேரியாயெனவோதி நுண்ணியனே! யெனப் பொருளுரைத்தலு மொன்று. நேரியனென்னும் வினைக்குறிப்புப் பெயர் நேரியாயென விளியுருபேற்றது.

நேரியன், நுண்ணியன். "நேரியனாய்ப் பரியனுமா" யென்றார் பிறரும். மொக்குளின்கு நாற்றம்போல உள்ளத்துண் மறைந்திருந்தலி னுண்ணியனென்றாரென்க. சேயாய்! - சேய்மையிலுள்ளோனே! என்றது கடவுளாற் கல்வியில்லார்க்கியாண்டுங் காணப்படாதவனென்றவாறு!

நணியானே! — அண்மை யுள்ளோனே! — கற்றார்க்கு உள்ளும் புறமும் உடனிருப்பவனென்பதாம்.

### மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!

உரை: ஒருவர் தஞ்சொல்லு நெஞ்சமுந் தம்மின் வேறாய் நீங்க அவற்றைக் கடந்துநின்ற அவ்விடத்துத் தனிநிலையுயிர்தானெனவிருந்த மறைபொருளாயவனே!

மறையெனினும் அற்றமெனினு மொன்று.
மாற்றம். சொல்.

எஞ்ஞான்று மிறைவன் முன்விலையும் படர்க்கையுமாகாது தன்மையொருமையாகி யேயிருத்தலியல்பாகலிற் சொல்லும் நினைவும் அவன்பாற் செல்லாது மீளும். இனி, மனமாற்றங்கழிய நின்ற மறைமொழியாயவனே எனவுரைத்தலுமொன்று.

மாற்றம், மாறுதல்: மாறுதலுந் திரிதலுமொன்று. இடையறுது திருந்தலைந்துழலுதன் மனத்ததியல்பு, அஃதவியல்பு கழிந்த ஒருநிலையேயாய் நின்றாங்கு நிற்றற்கு மறைமொழி சார்பாதலின் அதனைப் பிழம்பாகவுடைய இறைவனை மனமாற்றங்கழியநின்ற மறையோனென்றாரென்க.

மறைமொழியை இடையீடின்றி மீளமீள நினையா நிற்பார்க்கு நெஞ்சு நினைவெலா மொழிந்து நெடிதொடுக்கமுறும்.

( அடுத்த இதழில் வளரும் )

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஆனந்த ஸ்ரீ மார்கழி மீ உசு உ வெள்ளி


# உத்தராயணத்தில் உள்ளங் குளிருமா?

திக்கற்றுத் திடமின்றித் திகைத்து நின்றும் மக்கள் மார்கழியிலே திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் பாடித் திருவருளை வேண்டியபடி நின்றனர். தைத் திங்களும் அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது. ஞாலத்தை உய்ய வைக்கும் ஞாயிற்றைப் போற்றுவது மக்கள் மரபு. உத்தராயணத்துதிக்கும் சூரிய பகவானை நோக்கிச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துத் திருவமுதுசெய்து வழிபடும் காலத்திலே அடுப்பேற்ற அரிசியும் அதற்கேற்ற பருப்பும் நாளிகேரப் பழச்செழுந்தருவலும், சருக்கரையும் எங்கிருந்துபெறலாமென்றஞ்சிய வண்ணம் இருக்கின்றனர் மக்கள் இவ்வாண்டில். எனினும் வழிபாட்டை மறக்க மாட்டார்கள். மறந்து வாழவும் மாட்டார்கள். அங்கும் இங்குமாக அலைந்தாவது அமுது வைத்து அருக்கனைப் போற்றி வணக்கஞ் செய்ய இறைவன் திருவருளை இறைஞ்சியே நிற்பர்.

வறுமை வந்துற்றபொழுதும் மறுமை நினைத்து வழிபடுதலை வழுவாதியற்றும் சைவ மக்கள் பேடத்துக்கு ஞாயிறு செல்லும் திவ்விய புண்ணிய வேளையிலே பொங்கற் பூசை புரிந்து தைத் திங்கள் தண்ணளி தருமா என்று அரனடி போற்றி, வருங்காலம் வளமாகட்டும் என்று நம்பிக்கை கொள்வது வழமை.

அவனருள் வணங்கவும் அவனருள் வேண்டுமாகையால் மக்கள் மனத்துக்கண் மாசின்றி திரிகரண சுத்தர்களாய்ச் சூரிய துதியாகும் பொங்கற் பணியில் ஈடுபட்டுத் துன்பந்துடைப்பதற் கேதுவான இறைநெறியை கடைப்பிடிப்பதுவே மகரசங்கிராந்தி என்ற மிக மகிமையான காலத்தில் நாம் எல்லோருஞ் செய்யக்கூடிய பணி.

பூசை புரிவதற்கு உலகியலில் ஆசை அற்றுப் போதல் அவசியம் என்பர் அறிஞர். தைப்பொங்கல் தகைமை வாய்ந்ததாய் அமையச் சிந்தைத் தெளிவுடன் பூசை செய்தலே முறை.

கையொன்று செய்ய விழிஒன்று நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவிஒன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

எனப் பட்டினத்தடிகள் சுட்டிக்காட்டியபடி எண்ணம் நல்லெண்ணமாக வேண்டும். அவ்வெண்ணத்தை இயற்றிப் பேறெய்த உள்ளத் திண்ணம் வேண்டும். அவ்வாறமைந்தால் எண்ணியாங்கு யாதும் எய்தும்.

பொங்கற் பொலிவும் மங்கலமாய் அமைய எங்கள் எண்ணம் பங்கமற்றதாய் இறைநெறி நின்று பணி புரிவோமாக.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

---


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 10—1—1975 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்

ஆசிரியர்: திரு. மூ. மயில்வாகனம்


## மார்கழித் திங்கள் வழிபாடு

(நமது சிதம்பரம் நிருபர்)

திருத்தருமபுரம் ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மார்கழித் திங்கள் முழுவதும் சிறப்பு வழிபாடுகள் செய்ய வேண்டுமென்று திருவுளங்கொண்டு தினசரி ஒவ்வொரு சிவாலயமாக ஆதீனத்தின் 27 சிவாலயங்களுக்கும் எழுந்தருளி அம்மை அப்பருக்கும் பரிவார மூர்த்தங்களுக்கும் விசேஷ அபிஷேக அலங்காரங்கள் திருமுறை வாணர்களின் பாராயணங்களுடனும், மங்கள வாத்திய இசைகளுடனும் நடத்தி அர்ச்சனை ஆராதனைகள் செய்து மார்கழித் திங்கள் சிறப்பு வழிபாடுகளைச் செய்துகொண்டார்கள்.

## திருமுறை பஜனை

யாழ் அரியாலை இளைஞர் சைவத் தமிழ் வளர்ச்சி மன்றத்தினர் செவ்வாய்க் கிழமை தோறும் பஜனை நடாத்தி வருகின்றார்கள், எதிர்வரும் 14-1 75 செவ்வாயன்று அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் சந்நிதியில் மாலை 6½ மணி முதல் பஜனைப் பணி நிகழும். யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரும் கலந்துகொள்வார்கள். (நி)

## வள்ளுவர் படம்

17-1-75 இந்துசாதனம் Hindu Organ இதழுடன் திருவள்ளுவர் படம் இணைக்கப்படும் இதனை யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் அன்பளிப்புச் செய்கின்றனர். இவ்வார இதழுடன் இணைக்கப்பட்டிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கான நேர சூசியையும் அவர்களே அன்பளிப்புச் செய்துள்ளார்கள்,

## கட்டானையில் ஆனைச் சின்னம்

### ஆளுங் கட்சி ஆயிரம் வாக்குகளாலே தோல்வி

கட்டானை இடைத் தேர்தலிலே ஐ. தே. கட்சி அபேட்சகர் திரு: விஜயபால மென்டிஸ் 1,050 வாக்குகளால் அத்தானத்தைக் கைப்பற்றினர்.

சு. க. அபேட்சகர் திரு. பேர்ஞண்டோப்பிள்ளை 19,697 வாக்குகள் பெற்றனர்.

ஐ. தே. கட்சிக்கு 20,747 வாக்குகள் பொலிந்தன. ஏனையோர் நானுங்கூட என்று ஓடி நின்றனர்.

காற்றடிக்கும் திசையைக் கட்டானை, கலாவெவாவுக்குப் பின் காட்டுகின்றது போலும்.


உ
சிவமயம்

புதிய சந்தா விகிதம்

1-1-1975 முதல் இந்துசாதனம — Hindu Organ பத்திரிகைகள் இரண்டும் சேர்ந்து வருடச் சந்தா ரூபா 18/-

—அதிபர்


## சித்தாந்த பிரவேச பாலபண்டித தேர்வுகள் 1975

யாழ்ப்பாணம் — சைவ பரிபாலன சபையாரால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் சித்தாந்தத் தேர்வுகள் வழமைபோல இவ்வருடமும் நடைபெறும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் காலம்:—
1-8-75 முதல் 31-8-75 வரை

பரீட்சை நடைபெறும் காலம்;—
26-12-75 முதல் 28-12-75 வரை

விண்ணப்பப் பத்திரம் — பாடவிதானம தேவையானோர் முத்திரையிட்டப்பட்ட 4'×9' கடித உறையை அனுப்பி தபால் மூலம பெற்றுக்கொள்ளலாம்.

தேர்வுச் செயலாளர்,
சைவ பரிபாலன சபை
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## பொல்லார் மிக நல்லார்

( 1ஆம் பக்கத்து வளர்ச்சி )

விநாயகர் துதிப்பாடலுளது.

பதின்னான்கு சித்தாந்த சாத்திரங்களுள் முதல், வழி சார்பு நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் மூன்றிலும் உண்மை விளக்கம், திருவருட்பயன், சங்கற்பநிராகரணம் ஆகியவற்றிலும் விநாயகர் துதிப் பாடல்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

"கல்லால் நிழன்மலை வில்லார் அருளிய பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே" என்பது சிவஞானபோதம். "ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்......" என்னும் திருவிருத்தம் சித்தியார் பரபக்கத்திலும் சுபக்கத்திலும் காப்பாக உளது. பரபக்கத்தில் தனிவணக்கப் பாவுமுண்டு.

"......... அந்திநிறத் தந்திமுகத் தொந்தி வயிற்று ஐங்கரனைப் பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம்" என்பது உண்மை விளக்கம். "ஒளியான திருமேனி உமிழ் தானமிக மேவுகளியாரவரும் ஆனைகழல்" என்பது சிவப்பிரகாசம் தத்துவப்பிரகாசம், துகளறுபோதம், ஞானாமிர்தம் முதலிய சித்தாந்த சாத்திரங்களின் விநாயகர் துதிகளும் ஓதத்தக்கவை.

"நற்குஞ்சரக் கன்று நண்ணில், கலைஞானம் கற்குஞ்சரக்கன்று" என்னும திருவருட்பயனை முற்றிலும் நம்பினற்போதும். எல்லாம் வந்துவிடும்; வேதனை சோதனையில்லாச் சாதனை பிறக்கும் என்ப. இந்த வகையிற் சிவஞான சித்தியார் திருப்பாடல் அரியதோர் சாத்திரத் தோத்திரப்பா. "சிந்தைத் திருக்கோட்டும்; அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னைச் செய்யும் தேவே" என்பதற்குத் "தியானிப்போர் அறிவின்கண்ணதாகிய மலக்கோணைத்துரக்கும்; அதுவேயுமன்றிப் பிரமா விஷ்ணு முதலியோர் வாழ்வும் ஒருபொருள் அன்றென வெறுப்பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையும் விநாயகர் திருவடி தரும்" என ஐவர் உரைகண்டனர். மற்றோர் உரை, "அயன் அரி முதலியோரின் செல்வங்களையும் நல்கிச் சிவமாந் தன்மையையும் விநாயகர் திருவடி தரும்" என்கின்றது. எந்நேரமும் ஓதத்தக்க திருப்பாடல் இது.

நாவலர் பெருமான் சித்தியாரின் இக் கருத்தினைச் சிரமேற் கொண்டு அதே பொருளுள்ள பல பாடல்களினால் விநாயகரைப் பரவினர். சாத்திர தோத்திர அநுபூதிச் செல்வராகிச் செயற்கருஞ் செயல்கள் பலவற்றைச் செய்தார். சாத்திர தோத்திரம எங்கும் பரவலாயின.

பொல்லார் துணைபுரிவாராயின் சித்தாந்த சாத்திரம் மிக இனிக்கும்; ஞானகுருவாகி எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவிடுவார்; பொல்லார் எல்லார்க்கும் மிக நல்லார் என்பது சித்தாந்தம முடிபு.

## எல்லோருக்கும் ஏற்ற இறுங்கு

இறுங்கு எல்லோருக்கும் ஏற்ற சிறந்த உணவுத் தானியம். தானிய வகைகளில் போசாக்குக் கூடியது. இதில் நிரம்பிய மாச்சததும் போதிய புரதச்சத்தும், தேவையான தாதுப் பொருளும உள்ளன.

இறுங்கிலிருந்து எல்லா விதமான உணவுகளையும நாம் தயாரிக்கலாம். சோறு, பாற் சோறு, நெய்ச் சோறு, இடியப்பம், பிட்டு, உரொட்டி, தோசை, கேக், அலுவா, விசுக்கோத்து எது வேண்டுமானாலும் தயாரிக்கலாம.

இறுங்கை மூன்றுபங்கு நீரிட்டு அவித்துப் புழுக்கிக் குற்றி எடுக்கலாம நான்குமணி நேரம் நீரில் ஊறவிட்டு வடித்துக்குற்றி உமிபோக்கி மீண்டும் இரவு முழுவதும நீரில் ஊறவிட்டுக் காலையில் இடித்து மாவாக்கி வெயிலில் உலர்த்தி வேண்டிய போது பயன்படுத்தலாம்.

### நடுகை

எங்கள் பிரதேசத்தில் நவம்பர் மாதத்தில் இதை நாட்டிப் பயன் பெறலாம். இரண்டடி இடைவெளி விட்டுக் குழிகள் வெட்டி விதைகளை நாட்டி முளைத்த பின் ஆறங்குல இதாக நட்டு வளரவிடலாம். இறுங்கை அறுவடைசெய்தபின்பும் அதன் அடியிலிருந்து மறு நாள் முளைத்துப் பயிராகும். இறுங்கு பூத்துக் கதிராகுமுன் கால்நடைகளுக்கு உணவாக்குதல் ஆகாது, —